# திறவுகோல்

2057 | பங்குனி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# நீங்க மட்டும் தான்...

கடந்தவைகளின்
கசப்புகளும்
தோல்விகளும்

இன்றையவைகளின்
இழப்புகளும்
வேதனைகளும்

புத்தியை
ஆக்கிரமித்து

தூக்க இரவுகளுக்கு
வில்லானாய் மாற

கூடவே
நாளைய பற்றி
பயமும் பதட்ட
எண்ணம் வர

வாங்க வாங்க
நீங்க மட்டும் தான்
பாக்கி

என
மனதின் புலம்பல்

## இரட்டையாய்...

நமக்கு ஒரு விடயம்
தெரியவில்லை எனில்

எல்லோருக்கும்
எல்லாம் தெரியுமா

பிறர்க்கு எனில்
இது கூடவா தெரியலை

நமக்கான
வெற்றிக்கான
உவகையில்

எவ்வளவு சிரமத்திற்குப் பின்னே
கிடைத்தது

பிறர்க்கு எனில்
இது என்ன பெரிய விஷயமா

நம்மின்
ஏமாற்றத்தின்
தோல்வியின்
வேதனையில்
அத்தனையும் போச்சே

பிறர்க்கு எனில்
யாருக்குத்தான் இல்லை

நம்மின்
எதிர் காலம்
பற்றிய நம்பிக்கையில்
இது முடியும்

பிறர் என்றால்
பேசிக்கொண்டே
இருந்தால் போதுமா

என இரட்டையாய்

நிலைப்பாடாய்
நமக்கு என்று ஒன்று
பிறருக்கு என்று வேறு
பெரும்பான்மை
மனித மனங்களில்...

## மாறிப்போன கொஞ்சமும் நிறையவும்

முன்னர்
சிறிய
சிரமத்துக்கும்
சவால்களுக்கும்
வெற்றிக்கும்
பாராட்டுக்கும்

உறவிடத்திலும்
தோழையிடத்தும்
மட்டுமின்றி
பேசுபவர்களிடத்தில்
எல்லாம்
புலம்பலும்
ஆர்ப்பாட்டமாய்
இருந்த காலம் போய்

இப்போ
கொஞ்சமாய்
நெருக்கமானவர்களிடத்திலும்
நிறையவாய்
உள்ளுக்குள்ளே
இழப்பையும்
மகிழ்வையும்
பேசுவது

காரணமாய்
வயது அதிகரிப்பா

இல்லை
காலப்போக்கில்
பார்த்தவை
படித்தவை
கேட்டவை
பட்டறிவு
யோசித்தது என
மனப்பக்குவம்

## நானும்...

முப்பது ஆண்டுகள்
சனி பின்இரவில்
இல்லம் வருவதும்
ஞாயிறு பின்இரவில்
இல்லத்திலிருந்து
கிளம்புவதும்
இடைப்பட்ட நேரத்தில்
பெரும்பாலும்
வீட்டிலியே
இருப்பதும்...

வார இறுதி நாளிலும்
ஊர் திருவிழாவிலும்
இறைவனை தரிசிக்க
ஆலயம் செல்கையில்

ஒருவர்
எப்படியிருக்க

மற்றொருவர்
எங்கேயிருக்க

இன்னொருவர்
பார்க்கவே முடியலே

இன்னும் நன்கு
அறிந்த நண்பர்
ஒருவர் பழைய
நல்ல நினைவுகளை
ஞாபகப்படுத்த

நானும்
அறிந்த முகங்கள்
பார்த்து புன்முறுவல்
செய்ய

அட
நானும்
உள்ளூர்காரன்
என நீருபணம் ஆனதால்
மகிழ்ச்சி
கூத்தாடியது
மனது...

## அறிந்தும் தெரிந்தும்...

பண்டிகை கால
தொடர் விடுமுறையில்
இல்லத்தினரோடு
வெளியே செல்லலும்
நேரம் செலவழித்தலும்
பொழுதுபோக்குமாய்
நேரம் சென்ற பிறகு

இல்லம் விட்டு
செய் பணிக்காய்
நகரும் பின் இரவில்

இலக்குகளும்
கடமைகளும்
பொறுப்புகளும்
தவிர்க்க முடியாதவைகளும்
பக்குவப்படலும்

அறிந்தாலும்
தெரிந்தாலும்

இடம் நகர
மறுக்கும்
அடம் பிடிக்கும்
மனது...

## அந்த வார்த்தைகளில்...

இதுவா
அதுவா
என யோசனை கேட்பில்

குழப்ப சிக்கலுக்கு
தீர்வு கேட்கையில்

அடுத்த நகர்வு
பற்றிய
கருத்து கேட்கையில்

செய்தது
சரியா
என தீர்ப்பு
கேட்கையில்

நமக்கானவர்கள்
சொல்லும் வார்த்தைகள்

எதிர்பார்ப்பும்
முகமலர்ச்சியும்
நம்பிக்கையும்
கொடுப்பன

அது தான்
'ஒன்று சொல்லவா'

அது சரியா
உபயோகப்பட்டதா
என்பது வேறு கதை

## யாதெனில்...

படைப்பு என்பது
யோசித்தை
படித்தை
பார்த்தை
கேட்டதை
அறிந்ததை
அனுபவித்தை
பகிர்தல்

இந்த பகிர்வினால்
யோசிப்போ
உவகையோ
சோகமோ
ஆச்சாயர்மோ
சாதிக்கக துடிக்கும்
எண்ணமோ
ஆறுதலோ
உதவிடும்
எண்ணமோ
என ஏதாவது
ஒரு தாக்கத்தை
படிப்பவர் மனதில்
ஏற்படுத்த வேண்டும்
செய்தால் படைப்பாளியின்
வெற்றி...

## முன் தயாரிப்பு பதில்கள்

அவசரமாய்
கொஞ்சம் பண உதவி
என்ற கோரிக்கைக்கு

'நானே பணம் இல்லாமால்
சிரமப்படுகிறேன்'

நீங்க கொஞ்சம்
அவரிடம் சொன்னால்
நடக்கும் என்பதற்கு

'இப்ப எல்லாம்
என்னோடு அவர்
பேசறதேயில்லை'

இந்த பிரச்சனைக்கு
என்ன யோசனை
கேட்பிற்கு

'அவங்க அவங்க
சிக்கலை அவங்க அவங்க
தான் தீர்த்துக்கணும்'

கொஞ்சம் நேரம்
உங்களோடு
பேச முடியுமா
என்பதற்கு

'நான் முக்கியமான
வேலையாய்
வெளியே போய் கொண்டிருக்கின்றேன்'

## அதுவும் தான்...

மலர்ந்த முகமான
உடல் மொழியையும்

ஆரவார, உற்சாக
வார்த்தைகளான
வாய் மொழியையும்

சிவந்த கண்களும்
எட்டிப்பார்ப்பதும்
எப்பொழுது வேண்டுமானாலும்
கண்ணிலிருந்து
கன்னத்துக்கு இடம்
மாறும் நீராலும்
கை கால்கள்
உதடுகள் நடுங்கும்
வருத்த மெய் மொழியையும்

ஒட்டு மொத்த
உள்ளத்து கடின உணர்வுகளை
அப்படியே
மொழி பெயர்த்து
சொல்லும்
உதட்டு மொழியையும்

தனக்கானவர்களிடத்து
பகிருகையில்
அதே அப்படியே
உள் வாங்கி

தட்டி கொடுத்து
பாராட்டுதலும்

தலை தடவி
உள்ளிருந்து
சரியாகி விடும்
என்று உடல் மொழியும்
வாய் மொழியும்
பதிலாய் வருவதும்
உண்டு

எதிர்பார்த்த
அளவுக்கு
மறு மொழி கிடைக்காமல்
போவதும் உண்டு

காரணமாய்
அவர்களின்
அந்த கணத்து சிந்தனையும்
சூழ்நிலையையும்

## அந்த நாள் ஞாபகம்

பனிரெண்டாவதில்
மதிப்பெண் அட்டை
கொடுக்கும் முதல் நாளில்
நான் ஒன்றா இரண்டா
மனப்போரில்

கல்லூரி காலங்களில்
பிடித்த எழுத்தை
இல்லத்தினரை தொல்லைப்படுத்தாமல்
இரவு மெல்லிய விளக்கொலியில்
விடிகாலை வரை
விழித்திருந்து முழுவதுமாய்

படித்தது

அந்த நாள் ஞாபகமாய்...

## இவை சாத்தியப்படாததால்...

உதட்டு வார்த்தைகள்
உள்ளபடியே
உண்மை தானா

ஆக வேண்டிய
காரியத்துக்கா

நல் அபிப்பிராயம்
சேர்க்கவா

இன்று ஆதரவாய்
இருந்தால் நாளை
நமக்கு கிடைக்கும்
என்பதலா

அமைதி காத்தால்
எதிர்மறை எண்ணம்
வளரும் என்பதலா

என்று எதிர்மனிதனின்
வெளியிலிருந்து
அவரின் உள்ளம்
அறிய சாத்தியமில்லாதது தான்

மனித வாழ்க்கையில்

## அந்த வார்த்தைகள்...

பலமான திறன்
உள்ள பணி
நொண்டியடுக்கையில்

தோள் கொடுப்பார்
என எண்ணியவர்
தவறு செய்து சறுக்கையில்

சரியான யூகம்
என நம்பிக்கை
கொண்டவை
சாதகமாத நிலையில்

நன்றாக செய்திருக்கிறோம்
என்ற எண்ணம் கொள்கையில்
முற்றிலும் எதிர்பாரா
எதிர்மறை விமர்சனமாகையில்

இது முடிந்தால்
அது எளிது
என்று நினைக்கையில்
முன்னது முடிந்து
பின்னது
இழுத்துக்கொண்டே
போகையில்

அந்த வார்த்தைகள்
'என்ன இது'
உள்ளுக்குள்ளே...

## இவைகள் எல்லாம்...

உதயமாகி கொண்டே
இருக்கும் எண்ணங்கள்

கட்டளையிட்டு கொண்டே
இருக்கும் மனம்

செயல்பட்டு கொண்டே
இருக்கும் புத்தி

பணிக்காய் தயாராகி
கொண்டே திட்டமிடல்

செயலாகத்துக்கு
கொடுத்து கொண்டிருக்கும்
உழைப்பு

இலக்கை அடைந்த பிறகும்
உணரும் சந்தோஷம்

தோல்விக்கு பிறகு
பெற்றே ஆக வேண்டும்
கொள்ளும்
வைராக்கியம

ஒய்வு பொழுதுகளில்
வளர்த்து கொண்டே
போகும் தனித்தன்மை

உழைப்புக்கு பின்னான
பொழுதுகளில்
ரசித்து கொண்டே
இருக்கும் பொழுது போக்கு

இவைகள் எல்லாம்
வாழ்க்கையை
அடுத்த நகர்வையும்
அர்த்தப்படுத்தலையும்
செய்கின்றன....

## அதோடு சேர்த்து...

அப்போ
வார்த்தைக்கு
வார்த்தை எதிர்வாதம்

இப்பன்னா
அமைதி

அப்போ
குழுவாய் இருந்தால்
பேசு பொருள் பற்றி
தெரிகிறதோ இல்லையோ
வாய் ஒயாத பேச்சு

இப்போ
தேவையானவற்றுக்கு
பேச்சு
பிற நேரங்களில்
உற்று நோக்கல்

அப்போ
கருத்து மோதலில்
நான் சரி என நீருபிக்க
தனி மனித விமர்சனம்
காட்டுக்கத்தல்

இப்போ
அவர் எண்ணம் அவருக்கு
என் நிலைப்பாடு எனக்கு

இப்படி
ஆளே மாறிட்டே

என்று மட்டுமில்லாமால்
அதற்கான காரணமும்
கேட்டால்
கேள்வி அர்த்தப்படும்

## நினைவில் கொண்டால்...

நினைத்தது
செய்ததுக்கான
வெற்றி கிடைக்கையில்

இதற்கான
மெனக்கீடுகள்

தோல்வி ஏற்பட்ட பின்
காரணம் அறிந்து
மீண்டும் முயற்சித்த
பொழுதுகள்

கிடைத்தே ஆக வேண்டும்
என்ற கொண்ட வைராக்கியம்

அந்த கணத்தில்
யோசித்தால்
வெற்றியின்
மகிழ்ச்சியின்
அளவு அதிகப்படும்

## கடந்த பின்னே...

மிகுந்த முயற்சிக்கு
பெற்ற வெற்றியின்
உவகையில்
இன்னும் கொண்டாடியிருக்கலாமோ?

எதிர்பாரா தோல்வி
கொடுத்த இழப்பின்
புலம்பலில்
இதற்கு இவ்வளவு
வருத்தப்பட்டு இருக்க வேண்டாமோ?

சவால்களும்
யூகம் செய்திராதா
குறுக்கீடுகளும்
வந்த போது
ஏற்பட்ட மனக்கலக்கத்தில்
இன்னும் நிதாமானமாய்
யோசித்து இருக்கலாமோ?

தவிர்க்க இயலா
சுய சிந்தனை
அவை கடந்த பின்
மனித மனங்களில்...

## இத்தனையுமா?

ஜன்னலோர
இருக்கை
கிடைத்தவுடன்

வாகனத்தில்
சுற்றி சுற்றி
வந்து கொண்டிருக்கும்
காற்றிலிருந்து விடுதலை

சில்லென்று
முகத்தை தாக்கும்
வெளிக்காற்று

உள்ளுக்குள்ளேயே
ஓடிக்கொண்டிருந்த
எண்ணங்களிலிருந்து
தற்கால விடுதலை

கடந்து போன
கடந்துக்கொண்டு இருக்கின்ற
காட்சிகளிலிருந்து
ஞாபகங்கள்
அதில் இருந்த
உணர்வுகள்

அதை பயணம்
முடிந்த பிறகு
பகிர்வதற்கு
முன் தயாரிப்பு

இல்லேயெனில்
மனது
உருவகப்படுத்திக்கொள்ளும்
கற்பனைகள்

அட இத்தனையுமா
என்றால்
ஆம்

## பொறுத்து...

இந்த தெருமுனையில் தானே
சகாக்களோடு
நிறைய பேச்சு

இந்த ஆடை தானே
இந்த ஆண்டு
இங்கு

தேடித்தேடி
ஆசைப்பட்டு
வாங்கினோம்

இந்த நிறுவனத்தின்
நேர்முகத்தேர்வில்
தெரிவு செய்யப்படாமால்
போனோம்

இந்த போட்டித்தேர்வில்
தானே பல முயற்சிகளுக்குப் பிறகும்
வெற்றி கிடைக்கவில்லை

இங்கே தானே
திறமை காட்டி
செய்பணி பெற்றோம்

இந்த சிக்கலுக்கு தானே
சரியான தீர்வு சொல்லி
பாராட்டு பெற்றோம்

இந்த செய்த உதவிக்கு
தானே பெற்றவரின்
நன்றி கிடைத்தது

இதற்கு தானே
பிறரின் தவறால்
பிறரின் செயல்பாடின்மையால்
செய்பணியில்
அவமானப்பட்டோம்

என
மகிழ்ச்சியும்
வருத்தமும்
நினைவு பயணத்தில்

நீண்டு கொண்டே
போவது

எண்ண கிடைக்கும்
நேரத்தையும்
நேரம் கிடைத்தாலும்
அப்போதைய
சூழ்நிலையும்
மன நிலையையும்
பொறுத்தது...

அப்ப

வருத்த காரணங்களை
சரி செய்ய

நம்பிக்கை
இழப்புகளை
களைய

குழப்ப
சிக்கல்களுக்கு
தெளிவு பிறக்க

நாளைய முடிவுகளுக்கான
இன்றைய பயத்துக்கு
விடை கொடுக்க

பிரச்சனைகளுக்கான
தீர்வு காணும்
எண்ணங்கள் தோன்ற

பயணப்படுகின்ற
தனிமை யோசனையில்

நீண்ட நேரம் யோசித்து
யோசனைகள் கிடைக்கலாம்
இல்லாது போகலாம்

சிறிய கால அவகாசத்தில்
கூட கிடைக்கலாம்

இது எல்லாம்
நடக்காமால்
கவனச்சிதறல்
ஏற்பட்டு
மற்றொன்றில்
எண்ணங்கள்
பயணிக்கலாம்

எல்லாம்
அந்த கணத்து
மனநிலை
பொறுத்தது

--

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# அவள் மரணத்தின் மாயை

அவள் யாக்கை மனம் இருந்தும் மரண பின்னணியில்
யாரோ ஒருவரின் ஒவ்வாமையில் அனுதினமும்
அடைக்கப்பட்ட சிறை போல் பறக்க
மறந்த மாயைத் தோட்டத்தில் ...!!

தனிமையின் தாலாட்டில் மீண்டும் ஒரு பிறப்பு
அவளை மறக்கத் தொடங்கி
மாற்றமில்லாமல்

மனம் கண்ட சுவை அவளை ஆண்டு கொண்ட நிலை
அவள் கண்களில் மட்டும் பயணங்களின் தொடக்கம் தினம் ...!!

நன்றிகளுடன்...

—

கவிஞர் ம.செல்லமுத்து,
நூத்தப்பூர் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம்.

---

# ஏக்கம்

வெற்றுநெற்றியுடன் குட்டிசுரோரம்
கேட்பாராற்று கிடந்த பதுமை
பொம்மையை எடுத்து திலகமிட்டு
அழகுபார்த்தாள் விதவை பெண்..

## மனிதம்

மனிதர்களிடம் எல்லாம் இருக்கின்றது..
மனிதத்தை தவிர..

## குடியிருப்பு

பறவைகள்கூட சுதந்திரமாக சுற்றி திரிகின்றது...
மனிதர்கள்தான் கூண்டுகுள் அடைப்பட்டுகிடைக்கின்றார்கள்...

அடுக்குமாடி குடியிருப்பு

## அமாவாசை

வடக்கத்திற்காக விரட்டப்பட்ட
காக்கைகளை வடை பாயசத்துடன்
வரவேற்கிறது அமாவாசை...

—

மணிபாரதி தங்கசுந்தர்

# பிச்சிப்பூ வேட்டி

காவியோ கைலியோ
அப்பா உடுத்திப் பார்த்ததில்லை

எப்போதும்
வெள்ளை வேட்டி
மட்டும் தான்

அப்பா வழி தாத்தாவும்
அம்மா வழி தாத்தாவும்
அப்படியே

அப்பாவிற்கு
வேட்டியின் கரையும்
பொடுசாக இருக்க வேண்டும்

பெரிய கரை
அறவே ஆகாது

தங்கச் சரிகையே என்றாலும்
சின்னதாகத்தான்
இருக்க வேண்டும்

முழமும் நான்குதான்
எட்டு எடுப்பதில்லலை

பொதுவாக வெள்ளை வேட்டியைத்
தும்பைப்பூ என்பார்கள்

அம்மாவிற்கு அது பிச்சி

உடுத்தி கறையாக இருக்கும்போது
சிவந்த
பிச்சி மொட்டு

அலசி துவைத்த பின்பு
வெளுத்த
பிச்சிப் பூ.

- மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102

---

# கள்வெறி

எத்தனை எத்தனை முத்தங்கள்
எப்போதும்
கட்டிக்கொண்டுதானே
இருக்கின்றோம்...

நமக்காகவே
முத்தங்களையும் தழுவல்களையும்
கொண்டிருக்கும் இலச்சினைகள்
இன்னும் பல விதங்களில்
உருவாக்கப்பட வேண்டும்...

உண்மையாக சொல்
நேரில் இருந்திருந்தால்
நிகழ்ந்திருக்குமா
இத்தனை முத்தங்களும்
இத்தனை தழுவல்களும்
பகிரியிலேயே

வாழ்ந்து விடுவோம்...

கள்வெறி குறையாதிருக்கிறது.

## ஆதி காலை

நுட்பப் பூட்டு திறந்திருக்க
என் சாயலில்
ஒரு மீனவச் சிறுவன்
கடலில் இருந்து வருகிறான்

கரை வெளிச்சமும்
கடல் இருளும்
வரைய விட்ட மிச்சங்கள்
அவன் மேல் படிந்திருக்கின்றன

விருப்பங்களினிமித்தமா
விதிகளினிமித்தமா
இந்த உப்புக்காற்று

ஒரு நொடி
எனைக் கலைத்துச்
சென்றவனைத் தாண்டி
மீண்டும் கவனம் பெறும்
என் கண்களில்
காலத் துள்ளல்

அதிகாலையிலிருந்தா
ஆதி காலையிலிருந்தும்
நிற்கிறேன்
இப்போது எதிரே இருப்பது
கடலா காலமா

## அவர்கள் யாரோ

நீண்ட நெடுங் காலத்துக்குப் பிறகு
சந்தித்துக் கொண்டோம்...

அருகருகே அமர்ந்திருந்தோம்

வீடு வாசல் வசதி வாழ்க்கை என
மாறி மாறி பேசினோம்...

ஒன்றாக தேநீர் அருந்தினோம்
சிரித்துக் கொண்டோம்...

ஊர் கதை உலக கதை என
பேச்சு நீண்டது...

நிகழ்வு முடியும் நேரம்
மீண்டும் சந்திப்பதாக சொல்லி
கை குலுக்கி கிளம்பினோம்...

வீடு வந்து சேர்ந்த போதுதான்
ஒன்று தோன்றியது
சந்தித்துக் கொண்டது
நாங்களாக இருந்திருந்தால்
பேச்சு எப்படி
கண்ணீர் அல்லவா வந்திருக்கும்...!

—

கவிஜி

# நட்பைக் கொண்டாடுவோம்

நல்ல நண்பர்கள்
பரிசாக வந்த பொக்கிஷங்கள்
என்ன விலைக்
கொடுத்தாலும்
வாங்க முடியாத
உன்னத உறவு - நம் நட்பு

எந்தக் கவிஞனாலும்
எழுதி முடிக்க முடியாத
ஆகச்சிறந்த கவிதை - நம் நட்பு

எத்தனைப் புத்தகங்கள்
இருந்தாலும்
முடிவுரை இல்லாத
புத்தகம் - நம் நட்பு

தவறுகள் நேர்ந்து விட
கூடாதென
நேர்த்தியாய்
வழிகாட்டும்
வழிகாட்டி - நம் நட்பு

தடுமாறும் போதும்
தடம் மாறும் போதும்
தன்னம்பிக்கை தரும்
ஊன்றுகோல் - நம் நட்பு

தொலைவில் இருந்தாலும்
தொலைப் பேசியில்
தொடர நம்பிக்கை
தந்தது - நம் நட்பு

குற்றம் காணாமல்
சுற்றம் ஒன்றையே
குறிக்கோளாய்
கொள்ள செய்தது- நம் நட்பு

எதிர்ப்பார்ப்பதை விட
எதையும் கொடுத்து
உதவும் பண்பை
கொண்டது - நம் நட்பு

உறவுகள் மறந்தாலும்
உயிரென தோள்கொடுத்து
தோழமைக் கண்டது
நம் நட்பு

ஆண்டுகள் பலவானாலும்
அணையா புகழ்
கொண்டது - நம் நட்பு

அன்று பிரிவில்
திசைமாறிய
கப்பல்களுக்கு
இன்று கலங்கரை
விளக்கானது
நம் நட்பு

நட்பைக் கொண்டாடுவோம்
நண்பர்களாய் தொடர்வோம்

—

எழுத்தாளர்,
மு. ஜெரோஷா,
திருப்பூர்.

# பொருண்மை

(பொன்னாய் மேன்மை அடைவாய்!)

பா வகை:- ஆசிரியத்துறை

நன்மையே நாளும் நயமெனச் செய்திட
நன்னெறி வாழ்வினில் நாளும் ஓங்குமே
தன்திறன் ஓங்கியே தழைக்குமே
மின்னிடும் பொன்னாய் மேன்மை
அடைந்தே!

இன்பமே வாழ்வில் இயல்பென ஓங்கிட
தன்னல மின்றியே தருக்கையும் நீக்கிட
உன்செயல் என்றும் உயருமே
மின்னிடு பொன்னாய் மேன்மை
அடைந்தே!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.



# அவள் கைரேகை

உன் உள்ளங்கையை
ஜோசியக்காரனிடம் மட்டும்
காட்டிவிடாதே அவனும்
கவிஞனாகிவிடுவான் - பாவம்
பிறகு பிழைப்புக்கு என்ன செய்வான்!

தூக்கம்
கண்களை மூடினால்
கிடைக்கும் கண்ணால்
காண முடியா பொக்கிஷம்!

சிலருக்கு
தூரத்து சொந்தம்
பலருக்கு கூப்பிட்டதும்
வரும் பந்தம்!

அடுத்த நாளுக்கு
அலுங்காமல் அழைத்துச்
செல்லும் அதிவிரைவு
சொகுசு வண்டி!

செலவில்லா
ஒத்திகையில்லா
கனவென்னும் திரைப்படத்தில்
கதாநாயகனாகும் வாய்ப்பு!

தொலைதூர இடத்துக்கும்
நொடியில் கொண்டு
செல்லும் சூப்பர்சோனிக்
சாதனம்!

தானமாகத் தர முடியா
அவரவர்க்கு
கிடைத்த
அரிய வரம்!

அண்ணன் - தங்கை
ஓடியாடி

விளையாட
தாமதமாய்
வந்து சேர்ந்தாள்
தங்கை என்ற
பெண் ஒருத்தி
அது வரை
அறியவில்லை
அத்தனையும்
மாறும் என்றோ
அவளுக்கே
அத்தனையும் என்றோ
தங்கத்தட்டில்
தாங்கப் பட்டாள்
தனக்கென ஒரு
இடமும்
பிடித்தாள்!

தாயைப் போல
தாங்கிக்கொள்ளும்
தாராள
மனமும்
கொண்டாள்
சண்டையில்லா
நாளுமில்லை
என்னுடன்
சரிக்குசரி
நில்லாமலும்
இல்லை
சரமாரி
சண்டையும்
சாயங்காலம்
வரைதான்
ஒன்றாய்
தலையணையில்
சாயும் வரைதான்!

சட்டென
வளர்ந்து நின்றாள்
சற்று
விலகி
நின்று
வெட்கப்பட்டாள்!

அண்ணன் என்னும்
உறவுக்கு
ஆயிரம்
அர்த்தங்களும்
சேர்த்துவிட்டாள்!

அவளுக்கென்று
ஒருவர்
அவள் கைப்பிடித்து
வந்து நின்றார்
கூடவே கூட்டியும் - சென்று
விட்டார்!

மீண்டும்...
அத்தனையும் மாறியது
அவளில்லாமல்
அனைத்தும்
வெறிச்சோடியது!

--

ஜோ ஜான் கரோல்,
சென்னை.

# மலிவான உழவன்

நடவு வயலை மிதித்து ஒடித்த
கொக்குகளை கல்லெறிந்து விரட்டி..

ஈரம் பிடித்த தண்டுகளை
வெட்டிருசிக்கும் எலிகளுக்கு உணவில்
விசம் வைத்துக்கொன்று..

பால்பிடிக்கும் நேரம் வரை
மருந்துதெளித்து நன்மை செய்யும்
செய்யும் பூச்சிகளையும் அழித்து.

விளைந்த பின் கொத்தோடு உருவும்
மயில்களுக்கு சேலைகளால் சுற்றுச்சுவர்
எழுப்பி..

கூட்டமாய் வந்தமர்ந்து
கொத்தித்தின்னும்
ஊச்சான்கூட்டத்தினை பட்டாசு
வெடித்து பறக்கவிட்டு..

அறுத்து அடித்து தூற்றி காயவிட்டு

காய்ச்சல் இல்லை
கலப்பு கூட இருக்கு என்று
வருடம்தோறும் ஏதேதோ சொல்லி
நெல்லுக்கு கட்டுபடியாகத
விலைவைக்கும் வியாபாரிடயிடம்
கைகட்டி நிற்கிறான் உழவன்...

—

கணேசன். *R*

---

# தகைசால் தமிழர்!

உழைப்பாளர்களுக்காகவும்
ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும்
சம நீதிக் கிடைக்க
சமரசமின்றி
ஓங்கிப் பிடித்தது தூத்துக்குடியிலிருந்து
ஒரு செங்கொடி!

தோளோடு தோள் கொடுத்த
அத்தனை பேரையும்
தோழரே!
என்ற மானுட தத்துவத்தை
பொதுவுடமையாக்கியது.

விடுதலைப் போராட்டத்தில்
சக தோழர்களை
காட்டிக் கொடுக்காமல்
சிறைக் கதவை முத்தமிட்டு
சித்திரவதையை
புன்னகையால் கடந்த
மனிதநேய ஆளுமையே!

புத்தகங்களை
இடைவிடாது
வாசித்த வாசகரே!
ஜனநாயகம்
மண்டியிட்டு

வாசிக்க வேண்டிய
பொது உடைமை புத்தகம் நீ!

இடுப்பில் இருந்த துண்டு
தோலுக்கு வர போராடியவரே
கீழடியின் பிடி மண்ணை
கையில் ஏந்த
தோலில் இருந்த துண்டை
இடுப்பில் இறக்கிக் கட்டிய
தகைசால் தமிழரே!

பணம் பதவி புகழ்
எல்லாவற்றையும்
உதறிவிட்டு
சாமானிய மக்களின்
உரிமைக்காகக்
குரல் கொடுத்த
களப்போராளியே!

நூறைக் கடந்தது உனது உடல்!
கோடியை கடந்தது உனது புகழ்!
இன்னும்
பல நூற்றாண்டுகள் கடந்தும்
நிலைத்து நிற்கும் உனது செயல்!

வீரவணக்கம் தோழரே!

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 63807 04001



# அதிரூபம்

சிந்தையில் சேதியெல்லாம்
நீயாகிக்கிடக்க
ஓரவணம் கனாக்கண்டு
உற்றவளா(னா)ய் நானிருக்க
ஒற்றைச்சொல்லாகி
உயிரெடுப்பது தகுமா?

பேராவி
நீராவி ஆனதோ
பேரானந்தம் மறைத்து
சூலாகி மேலேகி
வெண்ணிலவுத் தோல் போலாகி
மேகதூதாயானதோ

பெருங்கடல்
விடாய் கொள்ளுமா
பேரன்பினில்
கடன் நிகழுமா
சிறுமீனென உழலும் நெஞ்சில்
கடும்பாரமாய் காதல்
நீயோ பெருவானம்
நானோர் சிறுகுருவி

பெருமானும்
பெரு மானும்
காட்டினில் அலைந்த காதைகள்
காலத்தின் விதியெழுதும் பாதைகள்
விலகியோட வழியில்லை
சிறகுகளே வானெல்லை
விரிக்கும் சிறகில்

விரிவாகும் வானம்

பிரபஞ்சத்துளி நான்
பேராசைப்பேராழியுன்னுள்
சுழலியாய் போனேன்
நானுமினி நீதான்
பேராழிதான்
பேரொளியுள் புதைந்ததால்

அழகொளி
அதிரூபம்
அதீத அன்பின் சொரூபம்
இனி நாம்!

## அதிசய உயிரி

இலையுண்ணி
விலங்குண்ணி
அனைத்துமுண்ணி
 அறிவோம் யாவரும்
ஆனால்...
விசித்திரப் பசி கொண்ட
அதிசய உயிரி ஒன்று உண்டு!
அதுதான் அன்பு தின்னி...

அது
பிரியமானவரின் -
ஒற்றைப்பார்வையை
உண்டு உயிர் தரிக்கும்,
அன்புக்குரியவரின்
மென்புன்னகை
புசித்துப் பசியாறும்,

அது
நேசிப்பவரின்-
மௌனம் விழுங்கி
செரிமானங்கொள்ளும்,
பேரன்பின்
நினைவுகள் அசைபோட்டு இரவுகளைக்
கடத்தும்...

அன்பை மட்டுமே
உணவாய்க்கொள்ளும்
அந்த அதிசய உயிரி
அன்பை மட்டுமே சுவாசித்து
அலைகின்ற
அந்த ஒற்றைப்பறவை
நான்தான்!!

## அந்தமிலி

என்ன தவம் செய்தனை
நான்
அந்தமிலி இந்த பந்தம்
சிந்தையிலே என்றும் சந்தம்
ஆதியன்பின் தேவதூது
அகத்தினிலே நட்பை ஓதும்
நானெனில் ஏதுமில்லை
நாமெனில் ஏது எல்லை?
நட்பில்லை இது ,
நாமிருக்கும்வரை வாழும்-
ஆன்ம பரியந்தம்!!

## போர்வை

உன்னைக் காதலிக்க
போதுமானதாக
இருக்கிறது

என்னை காப்பாற்றிக் கொள்ளும்

ஆயுதமாக இருக்கிறது

உயிர் வாழ வைக்கும்
காற்றாகவும் மாறி இருக்கிறது

பெரும்பாலான வேளைகளில்
என் பிணி தீர்க்கும் பானமாக இருக்கிறது

நான் சிறகு விரித்து பறந்திடப்
பெருவானமாகிறது

எனை
எதிர்ப்பின்றி
எச்சங்கடமுமின்றி
ஏந்திக் கொள்ளும் கிளையாகவும்
இருக்கிறது

நான் அதீதமாய்ப்பேசி
அளவளாவும் ஆழ்ந்த நட்புறவாகவும்

என் புனிதத்தின் புகழிடமாகவும்

நான் ஒளிந்து கொள்ளும்
புகலிடமாகவும்

நான் இறந்திடாமல் இருந்திடப்
பெருந்துணையாகவும் இருக்கிறது

கவிஞன் எனும் போர்வை!!

## பரிதாபங்கள்

நீ பார்க்கவில்லையதனால்
சுருங்கி விட்டது
என்னிதயம்

நீ பார்த்து விட்டாய்
இப்போது கொஞ்சம்
நிம்மதி...
ஆனாலும்,
இதயங்கள் இல்லாததில்
இன்னும் சுருங்கி விட்டது
இதயம்

முயற்சியில்
சற்றும் சளைக்காத
விக்கிரமாதித்தனாய் நான்...
அடுத்ததைப் பதிகிறேன்
அநாயாசமாய்க் காத்திருக்கிறேன்

நிச்சயம் கிடைக்கும்
இதயங்கள்...
நம்பிக்கைதானே வாழ்க்கை!

கதை பரிதாபங்கள்...

## அன்பின் பிணி

சிரிப்பு
களிப்பு
தவிப்பு
ஏமாற்றம்
வெப்புசாரம்
கண்ணீர்
அழுகை

எல்லாமே உரியவரிடம்
ஒப்புவிக்க வேண்டும்
என்றில்லை


எல்லாமே அந்தந்த நேரங்களில்
வருவதுதான்

கட்டுப்படுத்த முடியாது
சட்டென நெகிழும் சாதி நீ
அதை வழித்தெறிந்து
கடந்து செல்
ஒருநாளில்
ஒரு சொல்லில்,
ஒரு இரகசியக்குரலில்,
ஓரிசையில்
ஒரு இதயங்கீறும் பாடலில்,
வந்துன்
செவியடைந்தவை
ஞாபகங்கொள்ளும் வேளை
பேரமைதி கொண்டு
இதயம் புன்னகைக்கக் காண்பாய்

அன்பினியவள்,
அன்பின் பிணி போக்கத்தெரியாதவள்!

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.



# தெருக்கிணறு

எல்லோருக்கும்
பயன்படும் என
வெட்டப்பட்டது கிணறு

அடிவயிறு
சுரந்து தந்த
கிணற்றின் நீரைக் கண்டதும்
குழந்தையைக் கண்டது போல்
பெருமகிழ்ச்சி கொண்டார்கள்
சுரந்த கிணற்றை
பெற்றெடுத்த தாயைப் போல்
பாராட்டிக் களித்தார்கள்

மலையிலிருக்கும் தேன்
மண்ணில் வந்ததாக
ருசித்துக் குடித்தார்கள்

பல
வீட்டுக் கதைகளைக்
கேட்டுக் கொண்டே
இராட்டிணம்
தண்ணீரை
வாரி வாரி இறைத்தது

தண்ணீரை
சுரந்து சுரந்து
எல்லோருக்கும் அளிக்கும்
கிணற்றுக்கும்
அவ்வப்போது உண்டாகும்
கொலுசு அணியும் ஆசை
வாளியை இழுத்து
தனக்குள் மறைத்து
கொலுசு அணிந்து
மகிழ்வாள்

ஒரு தவளை
முதலில் குதித்தது

ஒரு மீன்
முதலில் விழுந்தது
வேப்ப மரத்தில்
பல நாளாய்
வாழ்ந்த இலை
கிணற்றுக்குள் விழுந்தது
ஓரிடத்தில் இதுவரை
வாழ்ந்ததால்
தண்ணீரின் மேலே
அவ்வப்போது பயணப்பட்டது

கண்ணீர் துடைக்க
தலையணை போதாது என
கிணற்று நீரால்
கண்ணீரைத் துடைத்தாள்
ஒருத்தி...
அவளை
அணைத்துக் கொண்டது
கிணறு

வானிலிருந்த நிலவை
தனக்குள் வர வைத்து
தவளைக்கும்
மீனுக்கும்
அதன் மேல்
நீந்த வைத்தது
கிணறு

காலங்கள்
கடந்தன

கிணற்றின்
வயிறு சுருங்கி விட்டது
நீரைச் சுமக்கவில்லை
துர்நாற்றத்துடன்
வயிறு முழுவதும்
நிரம்பிக் கிடக்கிறது
குப்பைகள்



- சா. கா. பாரதி ராஜா,
மனை எண் 1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732



ஓவியம்:
**மா. நிரல்யா,**
**மூன்றாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# நான் அழைக்க வந்தது

ஒரு காகம்.
வந்திருக்கும்
மற்ற காகமெல்லாம்
நான் அழைத்த காகம்
அழைக்க வந்தது.
/

நான் என்ற அகம்
என்னை மட்டும் சார்ந்ததல்ல;
உன்னையும் சேர்ந்ததே...!
/

என்னிடம் கேட்காமலே
நான் தொலைந்ததுபோல்;
உன்னிடம் சொல்லாமலே
என்னைக் கண்டுபிடி...!
/

நான் மன்னனில்லை
ராஜ வம்சமுமில்லை
ஜமீன் பரம்பரையுமில்லை.
என் களைப்பறிந்து சாமரம்
வீசுகிறது மரம்.
/

உன் நினைவைப் பிழிந்து
சாறாய்க் குடித்ததுதான்
இவ்விரவில்
என் தூக்கமின்மைக்குக்கான
முதன்மைக் காரணம்.
/

வற்றாப்
பெருநதியைக் கடக்க
பரிசலோ, படகோ;
எதுவும் வேண்டாம்
எனக்கு.
நதியில் நனையாமலும்,
வெள்ளத்தில் மூழ்காமலும்;
இலகுவாய்க் கடந்து விட்டேன்.
அப்பெருநதியை
இக்கவிதையில்!
/

இருளடர்ந்த
இராத்திரி வானம்
பாதிநிலாக் கோப்பையில்
மது அருந்த...
நானும் நீயும்
ஊடல் பிடியில்
காதல் செய்வோம் வா!
/

செவி கேட்ட
இசையால் நிறைந்து
என் மொழி மறந்தேன்.
/

உன்னை வணங்க
மலர் தேடியலையும்
பக்தனானேன்.
/

நாழிகைக் கழியும் முன்
நங்கை உன் இதழ்களில்
பருக வேண்டும் கனிச்சாறு.



- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.